பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 9.

அரசு கடிதம் (1டி) எண்.51, நாள். 12.05.2025

அனுப்புநர்
மருத்துவர் பி.சந்தர மோகன், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர்,
சென்னை–600 006.

ஐயா,

பொருள் பள்ளிக் கல்வி – தமிழ்நாடு அமைச்சுப் பணியாளர்கள் – பள்ளி மற்றும் அலுவலகங்களில் பணிபுரியும் அமைச்சுப் பணியாளர்களின் பணி நேரத்தினை காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை மாற்றியமைத்தல் – தொடர்பாக.

பார்வை
1. பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.019420/அ4/இ3/2023, நாள்: 9.5.2023.
2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.002192/அ4/ இ1/2025, நாள் 15.04.2025.

***********

பார்வை இரண்டில் காணும் கடிதத்தில், அமைச்சுப் பணியில் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியரல்லாத பணியாளர்களான உதவியாளர் / இளநிலை உதவியாளர்களின் வேலை நேரத்தினை காலை 9.00 மணி முதல் 4.45 மணி வரை என பார்வை ஒன்றில் காணும் செயல்முறையில் மாற்றியமைத்து ஆணையிடப்பட்டுள்ளதாக பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. பல்வேறு சங்கங்கள் இவ்வாணையினை இரத்து செய்து ஏற்கனவே நடைமுறையில் இருந்தது போன்று அனைத்து அமைச்சுப் பணியாளர்களுக்குமான வேலை நேரத்தினை மீண்டும் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை என நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளதாலும், அலுவலகம் மற்றும் பள்ளிகளில் பணிபுரியும் அமைச்சுப் பணியாளர்களின் பணிநேரத்தினை நிருவாக நலன் கருதி ஒருங்கிணைக்கப்பட வேண்டியுள்ளதாலும், பள்ளிகள் மற்றும்

அலுவலகங்களில் பணிபுரியும் அமைச்சுப் பணியாளர்களின் வேலை நேரத்தினை காலை 10.00 மணி முதல் 5.45 மணி வரை என்று மாற்றியமைத்து ஆணை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கோரியுள்ளார்.

3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கோரிக்கையினை கவனமாக பரிசீலனை செய்து, அதனை ஏற்று, பள்ளிகள் மற்றும் பள்ளிக் கல்வித் துறை அலுவலகங்களில் பணிபுரியும் அமைச்சுப் பணியாளர்களின் வேலை நேரம் அரசாணை (நிலை) எண்.85, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை, நாள் 11.03.1992–ன்படி, காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை மாற்றி அமைக்கப்படுகிறது.

4. மேலும், இவ்வேலை நேரத்திற்கு பின்பு வழக்கமான பணிகள் அல்லாமல் முக்கிய மற்றும் அவசர பணிகள் இருக்கும் போது மட்டும் கூடுதல் நேரங்களில் பணிகளை மேற்கொள்ளவும், விடுமுறை நாட்களில் முறைப்பணிக்கு வரிசைக் கிரமமாக பட்டியலிட்டு அதன்படி பணியாளர்களை அலுவலகம் வரும்படி அலுவலகத் தலைவர்கள் நடவடிக்கை மேற்கொள்ளும் வகையிலும் உரிய அறிவுறுத்தங்களை சுற்றறிக்கை மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

கோ. சுரேஷ்பாபு 12.5.25

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

செ.மு. எண்: 002192/அ4/எ1/2025 நாள்: 16.05.2025

(நகல்) தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது.

16.05.25

பள்ளிக்கல்வி இயக்குநர்

பெறுநர்

முதன்மைக்கல்வி அலுவலர்கள்

அனைத்து மாவட்டங்கள்

16/05/2025